1986 மார்ச் 19]

உருவாக்குகிற செயற் குறிப்பு ஏதேனும் இருக்கிறதா? அப்படி உருவாக்குகிறபோது வெளிநாட்டு உதவி ஏதேனும் நாடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–10)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்த 'பாஸ்ட் பிரீடர் டெஸ்ட் ரியாக்டர்' சோதனை நிலையத்திற்கு அன்னை இந்திரா காந்தி அம்மையார் பெயரிடப்பட்டிருக்கிறது. இதிலே ஆராய்ச்சி தொடர்ந்து நடத்தப்படும். இது ஆசியாவிலேயே மிகப் பெரிய கவுரவமான, பெருமைக்குரிய பரிசோதனை நிலையமாகும். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இன்னொரு அணு மின் நிலையம் கூடங்குளத்தில் வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தி வருகிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில், நாகப்பட்டினத்தில் ஒரு அனல் மின் நிலையம் உருவாக்கிட வேண்டுமென்ற செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளது. யுரேனியத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்கிற அணு மின் நிலையம் ஒன்று அனல் மின் நிலையத்திற்குப் பதிலாக தஞ்சையில் உருவாக்கிட தமிழ்நாடு அரசு முயற்சி எடுக்குமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்தில் கரியை உபயோகப்படுத்தி ஒரு மின் நிலையம் ஏற்படுத்த அரசு ஆய்வு செய்து வருகிறது. அணு மின் நிலையம் அங்கே நடத்துவதற்கு ஆய்வு இல்லை.

வில்லிவாக்கம் தொகுதியில் மின் விளக்குகள்

89—(*வினா எண் 5205) திரு. வி. பி. சிந்தன் மற்றும் திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் தொகுதியில் பல இடங்களில் மின் துறை மற்றும் உள்ளாட்சி மன்றங்கள் இணைந்து செயல்படாமையால் தெரு விளக்குகள் எரிவதே இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. பி. சிந்தன் : தலைவர் அவர்களே, பல பகுதிகளில் என்னுடைய தொகுதியில் மின் விளக்குகள் எரிவதில்லை. 75 சதவீதம் மின் விளக்குகள் எரியாத பகுதிகளும் உண்டு. விளக்குகள் எரிவதற்கு வேண்டிய பொருள்கள், பல்புகள் போன்றவை முறையாக வழங்கப்படவில்லை. மின் வாரிய அதிகாரிகளை அணுகினால் எங்களுக்குத் தெரியாது என்று சொல்லிவிடுகிறார்கள். நாங்கள் பணம் கட்டியிருக்கிறோம், பல்புகள் எங்களுக்குக் கிடைக்கவில்லையென்று ஊராட்சி அதிகாரிகள் குறிப்பிடுகிறார்கள். இந்த நிலைமையில் பொது மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இது குறித்து ஏதாவது ஆக்கபூர்வமான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, அம்பத்தூர், ஆவடி, திருவெண்காடு, தாத்தான்குப்பம், எஸ். ஆர். பி. நகர், நாம்பல், நெற்குன்றம், மதுரவாயல், வானகரம், ஆலப்பாக்கம், செட்டியார் அகரம் ஆகிய இடங்களில் மொத்தம் 8,513 தெரு விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. அது 80 சதவீதம் தெரு விளக்குகள் எரிவதற்குச் சமமானது என்றும், வில்லிவாக்கம் பஞ்சாயத்து யூனியனில் நிறுவப்பட்டிருக்கிற 398 தெரு விளக்குகளில் 336 தெரு விளக்குகள் எரிகின்றன என்றும், அது 84.4 சதவீதம் என்றும், தெரு விளக்குகள் எரிவதைப் பற்றி உண்மை நிலையை அறியவும், துரித நடவடிக்கை எடுக்கவும், அவ்வப்போது உள்ளாட்சி மன்ற அலுவலர்களும், மின்வாரிய பொறியாளர்களும் இணைந்து தெரு விளக்குகள் எரியும் நிலைபற்றி பார்வையிடுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : தலைவர் அவர்களே, நான் கணக்குகளுக்குப் போகவில்லை. சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு அம்பத்தூர் நகரியத்தில் 160 சோடியம் வேப்பர் லேம்ப்ஸ் ஏற்பாடு செய்யப்பட்டு, தேர்தல் முடிந்த மறுவாரத்தில் அவை எரியுமென்று அதிகாரிகள் சொன்னார்கள். எல்லா வேலைகளும் முடிந்துவிட்ட போதிலும், இன்று வரையில் அந்த விளக்குகள் எரியவில்லை. அவை எரிவதற்கு நடவடிக்கையெடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, அவைகள் விரைவில் எரிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வில்லிவாக்கம் தொகுதியில் மட்டுமல்ல, தமிழகத்தின் பல இடங்களில் உள்ளாட்சி மன்றங்களுக்கும், மின்துறை ஊழியர்களுக்கும் போதுமான இணைப்பு ஏற்படாத காரணத்தால் காலாகாலத்தில் இந்த மின்சாரம் சம்பந்தமான வேலைகள் செய்யப்படவில்லை யென்றும், அதன் காரணமாக பல்புகள் காலாகாலத்தில போடப்படாத நிலையும், வெளிச்சம் கிடைக்காத நிலையும் இருந்து

கொண்டிருக்கிறது என்பதும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறதா? அப்படியானால் அந்த மாதிரி யான நிலையை மாற்றுவதற்கு தகுந்த நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் உள்ளாட்சித்துறை, மின்துறை இரண்டையும் இணைத்து விளக்குகள் தேவைகளைப் பற்றி ஆய்வு செய்யவும், தேவையான விளக்குகளை வழங்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. வெகு விரைவில் இதுபற்றி அரசு ஒரு அறிக்கையை உள்ளாட்சித்துறை சார்பில் சமர்ப் பிக்கும்.

சென்னையில் கால்நடை மருந்தகங்கள்

90—(*வினா எண் 5464) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் உள்ள கால்நடை மருந்தகங்கள் எவ்வளவு ?

(ஆ) தேசிய வேளாண்மைக் குழுவின் பரிந்துரையின்படி அவைகள் அமைந்துள்ளனவா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சென்னை நகரில் உள்ள கால்நடை நிலையங்கள்:

1) கால்நடை மருத்துவமனை, சைதாப்பேட்டை.

2) கால்நடை மருந்தகம், இராயபுரம்.

3) கால்நடை மருத்துவக் கல்லூரியின் மருத்துவமனை, சென்னை.

(ஆ) இல்லை.

திருமதி. பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் பெருகி வரும் கால்நடைகளின் எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது இங்குள்ள மருந்தகங்கள் மிகவும் குறைவாக உள்ளன. எனவே அதிகமான கால்நடை மருந்தகங்களை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா ? மேலும் மாநகராட்சி துப்புரவு வண்டிகளில் வேலை செய்கிற கால்நடை களுக்கு அரசு மருத்துவ வசதிகளைச் செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி துப்புரவு வண்டிகளில் கட்டப்படும் எருதுகளின் சிகிச்சைக்காக கீழ்க்கண்ட இடங்களில் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன: (1) கோடம்பாக்கம், (2) மைலாப்பூர், (3) புதுப்பேட்டை, (4) பேசின்பிரிட்ஜ், (5) பெரம்பூர். மேற்கூறிய இடங்களில் பொதுமக்கள் கால் நடைகளை எடுத்துச் சென்றாலும், அவைகளுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.